## பணமும் வங்கித் தொழிலும்

### பண நிரம்பல்


1983 இல் விரிந்த பண நிரம்பலில் ($M_2$) அதிகரிப்பு காணப்பட்டதோடு போலி நாணயத்திலும் ஓர் குறைந்த வளர்ச்சி வீதம் காணப்பட்டது. பொதுமக்கள் வசம் உள்ள நாணயத்தையும் கேள்வி வைப்புக்களையும் $M_1$ கொண்டிருக்கும் வேளையில் போலி நாணயம் வர்த்தக வங்கிகளின் வைப்புச் செய்யப்பட்ட தனியார் துறையின் தவணை, சேமிப்பு வைப்புக்களை உள்ளடக்குகின்றது. இவ்வாண்டில் 1982 இன் ரூ. 17,350 இலட்சம் அல்லது 17 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் $M_1$ ரூ. 29,880 இலட்சத்தால் அல்லது 25 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் 1982 இன் ரூ, 43,280 இலட்சம் அல்லது 30 சதவீத அதிகரிப்பிற்கு மாறாக போலி நாணயம் ரூ. 37,590 இலட்சம் அல்லது 20 சதவீதத்தால் உயர்வடைந்தது. வங்கி களின் வைப்பு வீதங்களின் கீழ் நோக்கிய சீராக்கத்தின் விளைவால் வர்த்தக வங்கி களிலிருந்து ஏனைய வைப்புக்கள் திரட்டும் நிறுவனங்களை நோக்கிய வைப்புக்களின் வெளிப்பாய்ச்சல் போலி நாணயத்தின் வளர்ச்சி வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு ஓரளவுக்கு காரணமாகும். $M_1$ ஐயும் போலி நாணயத்தினையும் கொண்டுள்ள விரிந்த பண நிரம்பல் ($M_2$) 1982 இன் ரூ. 69,630 இலட்சம் அல்லது 25 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 67,470 இலட்சத்தால் அல்லது 22 சதவீதத்தால் அதிகரித்தது.

பொது மக்கள் வசமிருந்த நாணயத்தின் அளவு 1982 இன் ரூ. 11,650 இலட் சத்துடன் (24 சதவீதம்) ஒப்பிடுகையில் 1983 இல் ரூ. 12,120 இலட்சத்தால் (20 சத வீதம்) அதிகரித்தது. அதிகூடிய மாத அதிகரிப்புக்கள் மாச்சிலும் திசெம்பரிலும் முறையே 10 சதவீதம், 6 சதவீதமாக விளங்கியதுடன் ஏப்பிறலிலும் திசெம்பரி லும் விழாக் காலங்களாதலால் காசு நிலுவைகளுக்கான அதிகரித்த விருப்பத் தைக் காட்டுகிறது. மறுபக்கத்தில் பொது மக்களின் கேள்வி வைப்புக்கள் 1982இன் அதிகுறைந்த அதிகரிப்பான ரூ. 5,710 இலட்சத்திற்கு மாறாக (11 சதவீதம்) ரூ. 17,760 இலட்சத்தால் (31 சதவீதம்) அதிகரித்தது. இதைத் தொடர்ந்து $M_1$ இல் உள்ள கேள்வி வைப்பின் பங்கு 49 சதவீதத்திலிருந்து 51 சத வீதமாக இவ் வாண்டில் அதிகரித்தது. இதற்கு இசைவாக $M_1$ இல் உள்ள நாணயத்தின் பங்கு 1982இன் 51 சதவீதத்திலிருந்து 1983 இல் 49 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

முழுமையான நியதிகளில் தொடர்ச்சியாக அதிகரிப்புக் காணப்பட்ட போதி லும் (1983 மேயும் ஒகத்தும் தவிர) போலி நாணயத்தின் வளர்ச்சிவீதம் கடந்த சில ஆண்டுகளாக வீழ்ச்சிப் போக்கினைக் காட்டியது. 1983 இல் போலி நாணயத் தின் முழுமையான அதிகரிப்பு முக்கியமாக ஏனைய தனியார் துறையின் (தனியார் துறை உண்மையான) தவணை சேமிப்பு வைப்புக்களின் 1982 இன் அதிகரிப்பான ரூ. 28,150 இலட்சத்துடன் (25 சதவீதம்) ஒப்பிடுகையில் ரூ. 38,240 இலட்சத் தால் (27 சத வீதம்) அதிகரித்ததே காரணமாகும்.

## பண நிரம்பல்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 1.50

### நாணயக்கூட்டுக்கள் 1981 – 1983

(தொகை ரூபா பத்து இலட்சங்களில்)

| | குறுகிய பண நிரம்பல் (M1) | | | | | | விரிந்த பண நிரம்பல் (M2) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1981 | 1982 | 1983 | 1980ஐவிட 1981 இல் %மாற்றம் | 1981ஐவிட 1982 இல் %மாற்றம் | 1982ஐவிட 1983 இல் %மாற்றம் | 1981 | 1982 | 1983 | 1980ஐவிட 1981 இல் %மாற்றம் | 1981ஐவிட 1982 இல் %மாற்றம் | 1982ஐவிட 1983 இல் %மாற்றம் |
| சனவரி ... | 9,208 | 11,046 | 11,852 | + 17.3 | + 20.0 | + 7.3 | 20,532 | 26,890 | 30,802 | + 35.8 | + 31.0 | + 14.5 |
| பெப்புருவரி ... | 9,288 | 11,178 | 12,234 | + 17.9 | + 20.4 | + 9.4 | 20,199 | 26,758 | 31,708 | + 30.4 | + 32.5 | + 18.5 |
| மாச்சு .. | 10,125 | 11,671 | 12,986 | + 20.9 | + 15.3 | + 11.2 | 21,984 | 28,240 | 32,874 | + 36.9 | + 28.5 | + 16.4 |
| ஏப்பிறல் ... | 9,573 | 11,276 | 12,842 | + 14.2 | + 17.8 | + 13.9 | 21,555 | 28,395 | 33,114 | + 31.6 | + 31.8 | + 16.6 |
| மே ... | 9,168 | 11,132 | 12,606 | + 10.6 | + 21.5 | + 13.2 | 21,437 | 29,128 | 32,491 | + 31.3 | + 35.9 | + 11.5 |
| யூன் ... | 9,033 | 10,815 | 12,589 | + 9.1 | + 19.8 | + 16.4 | 21,681 | 28,739 | 32,798 | + 32.0 | + 32.6 | + 14.1 |
| யூலை ... | 9,097 | 10,710 | 12,964 | + 11.0 | + 17,8 | + 21.4 | 22,065 | 28,459 | 33,846 | + 32.5 | + 29.0 | + 18.9 |
| ஓகத்து ... | 9,197 | 10,892 | 12,977 | + 11.6 | + 18.5 | + 19.1 | 22,165 | 28,494 | 33,732 | + 29.6 | + 28.6 | + 18.4 |
| செத்தெம்பர் ... | 9,445 | 11,171 | 13,322 | + 16.1 | + 18.3 | + 19.3 | 23,460 | 29,781 | 34,620 | + 32.5 | + 27.0 | + 16.2 |
| ஒற்றோபர் .. | 9,520 | 11,413 | 13,572 | + 13.4 | + 19.9 | + 18.9 | 23,837 | 30,161 | 35,314 | + 29.7 | + 26.6 | + 17.0 |
| நவெம்பர் ... | 9.459 | 11,452 | 13,544 | + 5.3 | + 21.1 | + 18,3 | 23,842 | 29,860 | 35,324 | + 24.9 | + 25.3 | + 18.3 |
| திசெம்பர் .. | 10,024 | 11,760 | 14,748 | + 6.3 | + 17.4 | + 25.4 | 24,447 | 30,510 | 37.257 | + 23.0 | + 24.9 | + 22.1 |
| மாதாந்த சராசரி ... | 9,429 | 11,210 | 13,020 | + 12.7 | + 18.9 | + 16.1 | 22,267 | 28,785 | 33,657 | + 30.7 | + 29.3 | + 16.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# அட்டவணை 1.51

## நாணயக் கூட்டுக்களும் ஏதுக்காரணிகளும்

(தொகை பத்து இலட்சம் ரூபாய்களில்)

| விடயம் | | 1981 திசெம்பர் | 1982 திசெம்பர் | 1983 திசெம்பர் | மாற்றம் 1981/1982 தொகை | மாற்றம் 1981/1982 சதவீதம் | மாற்றம் 1982/1983 தொகை | மாற்றம் 1982/1983 சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **நாணயக் கூட்டுக்கள்** | | | | | | | | |
| 1. | மக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம் ... | 4,822.9 | 5,987.7 | 7,200.1 | +1,164.8 | + 24.1 | + 1.212.4 | + 20.3 |
| 2. | மக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் ... | 5,201.5 | 5,772.1 | 7,547.8 | + 570 6 | + 10.9 | + 1,775.7 | + 30.8 |
| | குறுகிய பண நிரம்பல் (M1) ... | 10,024.4 | 11,759.8 | 14,747.9 | +1,735.4 | + 17.3 | + 2,988.1 | + 25.4 |
| 3. | வர்த்தக வங்கிகளில் தனியார் துறை வைத்திருக்கும் தவணை சேமிப்பு வைப்புக்கள் .. | 14,422.5 | 18,750.1 | 22,509.0 | +4,327.6 | + 30.0 | + 3,758.9 | + 20.0 |
| 3.1 | கூட்டுறவு நிறுவனங்கள் .. | 334.5 | 357.3 | 469.2 | + 22.8 | + 6.8 | + 111.9 | + 31.3 |
| 3.2 | அரச கூட்டுத்தாபனங்கள் ... | 2,768.4 | 4,257.8 | 4,081.1 | +1,489.4 | + 53.8 | — 176.7 | — 4.2 |
| 3.3 | ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் ... | 11,319.6 | 14,135.0* | 17,958.7* | +2,815.4 | + 24.8 | + 3,823.7 | + 27.1 |
| | விரிந்த பண நிரம்பல் (M2) ... | 24,446.8 | 30,509.9 | 37,256.9 | +6,063.0 | + 24.8 | + 6,747.0 | + 22.1 |
| **ஏதுக்காரணிகள** | | | | | | | | + 16.3 |
| 1. | உள்நாட்டுக் கொடுகடன் ... | 33,966.6 | 42,397.6 | 49,293.0 | +8,431.0 | + 24.8 | + 6,895.4 | + 2.2 |
| 1.1 | அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் ... | 12,789.1 | 17,150.2 | 17,533.1 | +4,361.0 | + 34.0 | + 382.9 | + 6.4 |
| 1.1.1 | அரசிற்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ... | 15,667.4 | 19,719.8 | 20,972.1 | +4,052.3 | + 25.8 | + 1,252.3 | + 7.7 |
| | மத்திய வங்கியால .. | 14,104.4 | 18,000.5 | 19,393.0 | +3,896.0 | + 27.6 | + 1,392.5 | — 8.2 |
| | வர்த்தக வங்கிகளால் ... | 1,563.0 | 1,719.3 | 1,579.1 | + 156.3 | + 9.9 | — 140.2 | — 33.8 |
| 1.1.2 | அரசின் வைப்புக்களும் காசு நிலுவைகளும் ... | — 2,878.3 | — 2,569.6 | — 3,439.0 | + 308.7 | + 10.7 | — 869.4 | + 25.8 |
| 1.2 | தனியார் துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் | 21,177.4 | 25,247.4 | 31,759.9 | +4,070.0 | + 19.2 | + 6,512.4 | + 53.5 |
| 1.2.1 | கூட்டுறவு நிறுவனங்கள் ... | 1,293.9 | 1,187.7 | 1,822.7 | — 106.2 | — 8.2 | + 634.9 | — 6.2 |
| 1.2.2 | அரச கூட்டுத்தாபனங்கள் ... | 4,487.7 | 4,677.4 | 4,385.2 | + 189.7 | + 4.2 | — 292.3 | + 31.5 |
| 1.2.3 | ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் ... | 15,395.8 | 19,382.3 | 25,552.1 | +3,986.5 | + 25.8 | + 6,169·8 | |
| | | | | | | | | + 34.4 |
| 2. | வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய) ... | 2,940.3 | 2,371,8 | 3,186·9 | — 568.5 | — 19.3 | + 815.1 | |
| 3. | ஏனைய விடயங்கள் (தேறிய) .. | — 12,460.0 | — 14,259.5 | — 15,223.0 | —1,799.5 | | — 963.5 | |
| 3.1 | மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) ... | — 7,615.5 | — 9,382.7 | — 9.417.4 | —1,767.2 | | — 34.6 | |
| 3.2 | வர்த்தகவங்கிகளின் ஏனையபொறுப்புக்கள் (தேறிய) ... | — 4,702.2 | — 4.891.2 | — 6,319.3 | — 189 0 | | — 1,428.1 | |
| 3.3 | இடைப்போக்கிலுள்ள விடயங்கட்கான சீராக்கங்கள் ... | — 142.3 | 14.4 | 513.7 | + 156.7 | | + 499.3 | + 22.1 |
| | விரிந்த பணம் (M2) ... | 24,446.8 | 30,509.9 | 37,256.9 | +6,063.0 | + 24.8 | + 6,747.0 | |


குறிப்பு: அடையாளங்கள் M2 இன்மீது ஏற்பட்ட தாக்கத்தைக் குறிக்கின்றன.

* வதிவற்றோர் நாணய வைப்புக்கள் தவிர

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## உள்நாட்டுக் கொடுகடன்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

போலி நாணயத்தின் வளர்ச்சி வீதத்தின் வீழ்ச்சி அரச கூட்டுத்தாபனங்களின் வைப்புத் தொகையின் அளவில்ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியில் முற்றிலும் பிரதி பலிக்கப்பட்டது. 1982 இல் ரூ. 14,890 இலட்ச (54 சதவீதம்) அதிகரிப்பிற்கு மாருக இவ்வைப்புக்கள் ரூ. 1,770 இலட்சத்தால் (4 சதவீம்) வீழ்ச்சியடைந்ததோடு ஆண்டின் பின் அரைப் பகுதியில் இவ்வீழ்ச்சி அதிகளவில் காணப்பட்டது. இதே வேளையில் கூட்டுறவு நிறுவனங்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள் 1982 இன் அதி குறைந்த அதிகரிப்பான ரூ. 230 இலட்சத்திற்கு (7 சதவீதம்) எதிராக ரூ. 1,120 இலட்சத்தால் (31 சதவீதம்) கடுமையாக அதிகரித்தது.


1983 இல் நாணய வளர்ச்சி வீதத்தின் வீழ்ச்சிக்கு ஓரளவுக்கு உள்நாட்டுக் கொடுகடனின் குறைந்த வளர்ச்சி வீதமே காரணமாகும். 1982 இன் ரூ. 84,310 இலட்சம் (25 சதவீதம்) கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1983 இல் உள் நாட்டு கொடுகடன் விரிவாக்கம் ரூ. 68,950 இலட்சமாக (16 சதவீதம்) விளங்கியது. இதே வேளையில் நாணயக் கூட்டுக்களின் மீதான உள்நாட்டு கொடுகடன் விரிவாக்கத்தின் தாக்கம் வெளிநாட்டு வங்கித் தொழிற் சொத்துக்களில் ஏற்பட்ட ரூ. 8,150 இலட்சம் (34 சதவீதம்) அதிகரிப்பால் (தேறிய) மேலும் வலுவடைந்தது. எனினும், பெரும்பாலும் வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்களின் அதிகரிப்பினுல் ஏற்பட்ட வங்கித் தொழில் முறையின் ஏனைய விடயங்களின் (தேறிய) அதிகரிப்பான ரூ. 9,640 இலட்சத்தினுல் இந்நடவடிக்கைகளின் விரிவாக்கத் தாக்கம் தணிக்கப்பட்டது.

உள்நாட்டு கொடுகடன் விரிவாக்கம் அரசிற்கான தேறிய கொடுகடன் அதிகரிப்பிலும் தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடன் அதிகரிப்பிலும் ஏற்பட்ட ஒன்றிணைந்த விளைவாகும். இதில் அரசதுறைக்கான தேறிய கொடுகடன் முன்னைய ஆண்டின் 34 சதவீதத்திற்கு மாருக ரூ. 3,830 இலட்சத்தினுல் அல்லது 2 சதவீதத்தால் மாத்திரம் அதிகரித்தது. மொத்த உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கத்தில் அரசிற்கான தேறிய கொடுகடனின் பங்கு 1982 இன் 40 சதவீதத்திலிருந்து 1983 இல் 36 சதவீதத்திற்கு கணிசமாக வீழ்ச்சியடைந்தது. இது 1983 இல் அவதானிக்கப்பட்ட முக்கிய பண்பாக விளங்கியதோடு வங்கித் தொழில் அமைப்பில் அரசின் தங்கியிருப்பு குறைவடைந்ததை பிரதிபலித்தது.

1982 இன் ரூ. 38,960 இலட்சங்களுடன் (28 சதவீதம்) ஒப்பிடுகையில் மத்திய வங்கியின் அரசிற்கான மொத்த கொடுகடன் இவ்வாண்டில் ரூ. 13,930 இலட்சத்தால் (8 சதவீதம்) மட்டுமே அதிகரித்தது. வர்த்தக வங்கிகளின் அரசிற்கான கொடுகடன் முன்னைய ஆண்டின் ரூ. 1,560 இலட்சம் (10 சதவீதம்) அதிகரிப்பிற்கு மாருக ரூ. 1,400 இலட்சத்தால் (8 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. எனினும் அரசிற்கு வங்கித்தொழில் அமைப்பிலிருந்தான மொத்தக் கொடுகடன் அதிகரிப்பு 1982 இன் ரூ.3,090 இலட்சங் (11 சதவீதம்) கொண்ட தொகையுடன் ஒப்பிடுகையில் ரூ. 8690 இலட்சமாக (34 சதவீதம்) விளங்கி வங்கித்தொழில் அமைப்பின் வசம் உள்ள அரச வைப்புக்களினதும் காசு நிலுவைகளினதும் கணிசமான அதிகரிப்பினுல் ஓரளவுக்கு தணிக்கப்பட்டது.

## வெளிநாட்டு வங்கிச் சொத்துக்கள் (தேறிய)

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

உள்நாட்டுத்துறை வெளிநாட்டுத்துறை இரண்டிலும் சாதகமான அபிவிருத்திகளின் விளைவாக வங்கித் தொழில் அமைப்பிலிருந்து அரசிற்கான தேறிய கடன் பாடுகளை 2 சதவீத சிறிதளவு அதிகரிப்புக்குள் வைத்திருக்க அரசிற்கு முடிந்தது. முதலாவதாக 1983 மார்ச்சில் மத்திய வங்கியின் ரூ. 15,000 இலட்ச இலாபத்தினைப் பயன்படுத்தியமையின் விளைவாக மத்திய வங்கி தவிர்ந்த ஏனைய பொறுப்புக்களில் (தேறிய) ஏற்பட்ட குறைப்பு வங்கித் தொழில் அமைப்பில் அரசின் குறைந்த தங்கியிருப்பைப் பிரதிபலித்தது. இரண்டாவதாக, ரூபாப் பிணைகளுக்கு முக்கிய மூலங்களின் (தேசிய சேமிப்பு வங்கி, ஊழியர் சேம நிதியம், கடன் கரைப்பு நிதியங்கள் போன்ற) அதிகரித்த உதவு தொகை வங்கி நிதியிடலை அரசு நாடிச் செல்வதைக் குறைத்தது. மூன்றாவதாக 1983 தொடக்கத்தில் நடைமுறைப்படுத்திய உயர்ந்த இறக்குமதித் தீர்வைகளும் மொத்த விற்பனை வரிகளும் தேயிலை பெறுமான விகித வரிகளினதும் வருவாயால் அரசு தனது வருவாய் நிரம்பலை அதிகரிக்க முடிந்தது. மேலும் மூலதனச் செலவில் ஏற்பட்ட குறைப்பும் ஜப்பானிய யென் கடனின் பயன் பாடும் ஐரோப்பிய நாணய கடனின் ஒரு பகுதியான பெறுகையும் அரசை வங்கித் தொழில் அமைப்பிலிருந்து கடன்படுதலைக் குறைப்பதற்கு உதவின.

மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடன் (அரச கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், ஏனைய தனியார்துறை ஆகியவற்றைக் கொண்டுள்ளது.) முன்னைய ஆண்டின் அதிகரிப்பான ரூ. 40,700 இலட்சம் அல்லது 19 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 65,120 இலட்சத்தால் அல்லது 26 சதவீதத்தால் உயர்வடைந்தது. தனியார் துறைக்கான மொத்தக்கொடுகடனின் மொத்த அதிகரிப்பில் பெருமளவான பங்கு (95 சதவீதம்) ஏனைய தனியார் துறைப் பிரிவினருக்கு வழங்கப்பட்ட கொடுகடன் அதிகரிப்பின் விளைவாகும். இத்துறைக்கான மொத்தக் கொடுகடன் முன்னைய ஆண்டின் 26 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 32 சதவீதத்தால் உயர்வடைந்தது. முதற் காலாண்டில் தனியார் துறைக்கான கொடுகடன் அதிகரிப்பு 1982 இறுதியில் தேர்தல்களைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் அதிகரிப்பினது விளைவாயிருக்கலாம். நடுவாண்டின் குறுகியகால வட்டி வீதங்களின் குறைப்பினால் கொடுகடனுக்கான அதிகரித்த கேள்வி யூலைக் கலவரத்தினால் மேலும் அதிகரித்தது. கலவரங்களின் காரணமாகவும் ஒப்புதலளிக்கப்பட்ட மேலதிகப் பற்று எல்லைகளின் அதிகூடிய பயன்பாட்டினது விளைவாகவும் தனியார் துறையிலுள்ள சில வியாபார நிறுவனங்கள் கடன்கள், முற்பணங்கள் ஆகியவற்றை மீளச் செலுத்தலில் (ஏறத்தாழ (ரூ. 8,000 இலட்சம்) காலதாமதம் ஏற்பட்டதன் பயனாக வெளிநிற்கும் கொடுகடன் உயர்ந்த மட்டத்தில் விளங்கியது. இதேநேரத்தில் மூன்றாம் காலாண்டில் ஏற்றுமதி வருவாய்களின் பெறுகையில் காலதாமதம் ஏற்பட்டது. ஏற்கனவேயுள்ள கடன்களுக்கும் மேலாக, பாதிக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் உற்பத்தியை மீண்டும் தொடங்குவதற்காக புதிய கடன்களை வழங்குமாறு வங்கிகள் கட்டாயப்படுத்தப்பட்டன. புறக்கோட்டை பங்கு மாற்றல் சந்தையின் நடவடிக்கைகளினால் இதுவரை பெருமளவு நிதியிடப்பட்டுவந்த பணிகள் துறையில் கொடுகடன் தேவைகளை வங்கிகள் எதிர்நோக்கவேண்டியதால் வெளிநிற்கும் கடன்களும் முற்பணங்களும் அதிகரித்தன.

1983இல் விலைகளில் கணிசமான தாக்கங்கள் காணப்பட்டன. 1982 திசெம்பரில் முடிவடையும் 12 மாதப் பகுதியில் 5 சதவீத ,(புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில்) மிதமான அதிகரிப்பினைப் பதிவுசெய்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 1983 திசெம்பர் அளவில் 21 சதவீதத்தால் உயர்வடைந்தது. இதேவேளையில் 1982இல் 11 சதவீதத்தில் விளங்கிய சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி அதிகரிப்பு 1983இல் 14 சதவீதமாக உயர்வடைந்தது.

1982இல் ரூ. 1,060 இலட்சம் (8 சதவீதம்) வீழ்ச்சிக்கு மாறாக ரூ. 6,350 இலட்சம் (54 சதவீதம்) கணிசமான அதிகரிப்பைப் பதிவுசெய்த கூட்டுறவு நிறுவனங்களிலும் கொடுகடனுக்கான உயர்ந்த கேள்வி காணப்பட்டது. ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலும் வளர்ச்சியடைந்து ரூ. 10,010 (84 சதவீதம்) இலட்சமாக விளங்கிய கூட்டுறவுத் துறைக்கான மொத்தக் கொடுகடன் ஆண்டின் அதைத் தொடர்ந்துவந்த மாதங்களில் சிறிதளவால் மட்டுமே வீழ்ச்சியடைந்தது. அதிகூடிய மாத அதிகரிப்பான ரூ. 5,260 இலட்சம் (37 சதவீதம்) மாச்சில் காணப்பட்டது. பெரும்போக அறுவடையின் அதிகரிப்பினாலும் 1983 மாச்சு 1ஆம் நாளிலிருந்து உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் நெல்லின் கொள்வனவு விலை புசலொன்றுக்கு ரூ. 57.50 இலிருந்து ரூ. 62.50 ஆக மேல்நோக்கித் திருத்தப்பட்டதனாலும் உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் நெற் கொள்வனவுக்கான முற்பணங்களின் அதிகளவு அதிகரிப்பில் ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலும் கொடுகடனில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை அதிகளவில் பிரதிபலித்தது. இம்முன்னேற்றங்கள் இவ்வாண்டில் கூட்டுறவு நிறுவனங்களுக்கு உயர்மட்ட வங்கி நிதியிடலை வலியுறுத்தியது. கூட்டுறவு நிறுவனங்களுக்கான கணிசமானளவு கொடுகடன் நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு அதன் உயர் கொள்வனவுகளை சமாளிப்பதற்காக வழங்கப்பட்டன.

இதேவேளை 1982இன் ரூ. 1,900 இலட்சம் அல்லது 4 சதவீத அதிகரிப்புக்கு மாறாக மீளாய்வின் கீழான ஆண்டில் அரச கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ரூ. 2,920 இலட்சத்தால் (6 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது, இவ்வாண்டில் இத்துறைக்கான கொடுகடன் ஒழுங்கற்ற முறையில் காணப்பட்டதோடு அதியுயர் மாத அதிகரிப்புக்கள் மாச்சு, ஒகத்து, செத்தெம்பரில் (7 சதவீதமாக) விளங்கின. இத்துறைக்கான கொடுகடனில் வீழ்ச்சிக்கு முக்கியமாக கடன்களும் (ரூ. 4,430 இலட்சம்) இறக்குமதிச் செலவுகளும் (ரூ. 2,890 இலட்சம்) காரணம் ஆகும். கூட்டுத்தாபனங்களின் வங்கிக் கடன்பாடுகளின் குறைப்புக்கு சில கூட்டுத்தாபனங்களின் திறமைமிக்க நிதி முகாமைத்துவம், அதிகரித்த விற்பனை வருவாய்களிலிருந்து கணிசமான பண உட்பாய்ச்சல், சில கூட்டுத்தாபனங்கள் உயர் வட்டிக் கொடுப்பனவுகளின் காரணத்தால் வங்கிக் கடன்பாடுகளை குறைப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் என்பன ஓரளவுக்குக் காரணங்களாகும். இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் வெளிநாட்டு நிதியிடல் கிடைப்பது தொடர்ந்து இருந்துவந்ததால் உள்நாட்டு வங்கித்தொழில் அமைப்பை நாடுதலைக் குறைத்தன. எனினும், இவ்வாண்டுக் காலத்தில் இலங்கை மின்சபை, இரு பெருந்

தோட்டக் கூட்டுத்தாபனங்கள், இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் கடன்பாடுகள் உயர்மட்டங்களிலேயே மாற்றமின்றி இருந்தன,

வங்கித்தொழில் அமைப்பின் வெளிநாட்டு சொத்துக்கள் (தேறிய) 1982இன் ரூ. 5,690 இலட்சம் அல்லது 19 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1983இல் ரூ. 8,150 இலட்சத்திற்கு அல்லது 34 சதவீதத்தினுல் அதிகரித்தது. வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களின் இவ்வதிகரிப்பிற்கு நாட்டின் சென்மதிநிலுவை நிலைமையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றமே காரணமாகும். எனினும், வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் இவ்வாண்டில் ஒழுங்கற்ற போக்கைக் கொண்டிருந்தன. இதில் அதிகூடிய மாத அதிகரிப்பு 1983 நவெம்பரிலேயே ஏற்பட்டது. உயர்ந்த ஏற்றுமதி வருவாய்களின் விளைவால் வர்த்தக வங்கிகளிடமிருந்து வெளிநாட்டு செலாவணி கொள்வனவுகள் (ரூ, 39,480 இலட்சம்) துணை நில் ப. நா. நிதிய ஏற்பாடுகளின் கீழான எடுப்பனவுகள் (ரூ. 5,170 இலட்சம் யப்பானிய யென் கடனின் பயன்பாடு (ரூ. 3,310 இலட்சம்) ஐரோப்பிய நாணய கடன்கள் ஒருபகுதி (ரூ. 6,250 இலட்சம்) ஆகியன மத்திய வங்கியின் வெளிநாட்டு காசு, நிலுவைகளின் கையிருப்புகளை அதிகரித்தன.

### வர்த்தக வங்கித் தொழில்

இவ்வாண்டில் காலத்திற்குக் காலம் திரவத்தன்மைப் பிரச்சினைகளால் வர்த்தக வங்கித் தொழில் பாதிக்கப்பட்டமையே முக்கிய பண்பாக இருந்தது. ஆண்டின் பின் அரைப்பகுதியில் வங்கிகளால் எதிர்நோக்கப்பட்ட திரவத்தன்மைக் கட்டுப்பாடுகள் மேலும் பாதிப்படைந்தன. இதற்கு முக்கியமாக யூலையின் பின் ஏனைய தனியார் துறைகளிலிருந்தான கொடுகடனுக்கான உயர்ந்த கேள்வி காரணமாகும். ஆண்டின் முதல் ஆறு மாதங்களிலும் 13 சதவீதத்தால் அதிகரித்த இத்துறைக்கான கொடுகடன் யூலையில் 3 சதவீதத்தாலும் ஓகத்தில் மேலும் 6 சதவீதத்தாலும் அதிகரித்து 1983இன் தனியொரு மாதத்தில் பதிவு செய்யப்பட்ட மிகக்கூடிய அதிகரிப்பாக விளங்கியது. கொடுகடனின் இக் கடுமையான அதிகரிப்பு ஆண்டின் முதல் அரைப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட வட்டி வீதங்களின் கீழ்நோக்கிய திருத்தத்தை ஓரளவுக்குப் பிரதிபலித்தது. வர்த்தக வங்கி மூலங்களின்படி, யூலை கலவரங்களினுல் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களின் குறைந்தளவிலான மீளச் செலுத்தலும் கொடுகடனின் உயர் மட்டத்திற்குக் காரணமாகும். புதிய கொடுகடன்களை வழங்கியும் கடன்களின் முதிர்ச்சிக்காலத்தை நீடித்தும் அக்கடன்களின் மீதான வட்டி வீதங்களைக் குறைத்ததன் மூலமும் வங்கிகள் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு உதவியளித்தன. பல குறிகாட்டிகளினுல் எடுத்துக் காட்டப்பட்டவாறு ஆண்டின் நாலாம் காலாண்டின் திரவத்தன்மை மேலும் பாதிப்படைந்தது. நிதிகளுக்கு அதிகரித்த கேள்வியின் விளைவால், குறிப்பாக குறுகிய வைப்புத் தளத்தைக் கொண்ட வெளிநாட்டு வங்கிகளினுல் வங்கிகளுக்கிடையேயுள்ள அழைப்புப் பணச் சந்தை வீதங்கள் உயர் மட்டங்களை அடைந்தன. 1982 இறுதியில் ஆண்டுக்கு 15.75 – 18.50 சதவீத வீச்சில் விளங்கிய வீதங்கள் ஒற்றோபர் இறுதியில் ஆண்டுக்கு 18.5 - 35-0 சதவீத வீச்சிற்கு உயர்வடைந்து 1983 திசெம்பர் இறுதியில் ஆண்டுக்கு 20 - 37 சத

வீதத்திற்கு மேலும் உயர்வடைந்தது. வர்த்தக வங்கிகள் அவற்றின் தற்காலிக திரவத்தன்மைப் பிரச்சினைகளை ஈடுசெய்வதற்குத் தண்ட வீதத்தில் மத்தியவங்கி யிடமிருந்தான கடன்பாடுகளையும் நாடி நின்றன.

கொடுகடனுக்கான உயர்ந்த கேள்வியினை பிரதிபலித்தவாறு கடன் / வைப்பு விகிதம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே அதிகரிக்கும் போக்கினைப் பதிவு செய்தது. இவ்விகிதம் ஆண்டின் முதல் பத்து மாதங்களிலும் 0.92இலிருந்து 0.99இற்கு படிப்படியாக அதிகரித்தது. எனினும், மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப் பட்ட கட்டுப்பாடான நாணய நடவடிக்கைகளினால் ஓரளவுக்கு ஆண்டின் இறுதி இருமாதங்களிலும் கடன் / வைப்பு விகிதம் முறையே 0.98 ஆகவும் மேலும் 0.93 ஆகவும் வீழ்ச்சியடைந்தன.

1983 காலப்பகுதியில் வர்த்தக வங்கிகள் அதிக வைப்புக்களை குறிப்பாக குறுகிய கால தவணை சேமிப்பு வைப்புக்களை தொடர்ந்தும் கவர்ந்தன. குறுங் கால தவணை சேமிப்பு வைப்புக்களை கவர்வதற்கான வர்த்தக வங்கிகளின் செய லாற்றம் நிதி வட்டத்தில் வட்டி வீதங்களில் எதிர்கால போக்குகளின் தெளி வற்ற தன்மையை எடுத்துக்காட்டியது. வங்கித்தொழில் அமைப்புக்கு பதுக்கி வைக்கப்பட்ட கணிசமானளவு பணத்தினை ஈர்ப்பதற்காக வங்கிகள் தொடர்ந் தும், வைப்புச் சான்றிதழ்களை வழங்கிவந்தன. 1983 இறுதியில் 20 வங்கிகளுக்கு வைப்புச் சான்றிதழ்களை வழங்க முறைப்படி ஒப்புதல்கள் வழங்கப்பட்டதோடு அதே நாளில் வைப்புச் சான்றிதழ்களில் வெளிநிற்கும் தொகை ரூ. 6,100 இலட்ச மாக விளங்கியது. வெளிநாட்டு வங்கி வரைவுகளை காசாக மாற்றும் வசதிகள் இவ்வாண்டில் மேலும் அதிகரிக்கப்பட்டன. இப்படியான வரைவுகளை காசாக்கு வதற்கு இலங்கை வங்கி சனிக்கிழமைகளில் தனியான பணி ஒன்றினை தொடங் கியது. வரையறுக்கப்பட்ட பாங் ஒப் கிறடிற் அன்ட் கொமேர்ஸ் இன்ரனேசனல் (ஓவசீஸ்) கட்டுநாயக்காவில் உள்ள கொழும்பு வானூர்தி நிலையத்தில் வெளி நாட்டு நாணய பணமாக்கல், நாணயமாற்று நிலையம் ஒன்றினை நிறுவியது.

மேலும் வசதியானதும் சிக்கலானதுமான வங்கித்தொழில் நிதிப் பணிகளுக் கான அதிகரிக்கும் கேள்விகளை வழங்குவதற்காக வங்கி நடவடிக்கைகளை விரிவு படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து 1983இல் வெளிநாட்டு உதவி யுடன் வணிக வங்கி ஒன்றும் நிறுவப்பட்டது. மக்கள் வங்கியினதும் லண்டன் கயின்ஸ் வரையறுக்கப்பட்ட மகோன் அன் கோ இனதும் ஒரு கூட்டு நிறுவனமாக இது நிறுவப்பட்டது. மக்கள் வணிக வங்கி அதன் முதல் தொழிற்படு ஆண்டில் செயற்றிட்ட இனங்காணல், செயற்றிட்ட அபிவிருத்தி, கூட்டுக் கடன் வழங்கல் ஆகிய துறைகளில் ஈடுபட்டது.

இவ்வாண்டில் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் நடவடிக்கை களிலும் முன்னேற்றங்கள் காணப்பட்டன. 1983 இறுதியில், இலங்கையில் 24 வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகள் தொழிற்பட்டன. அவற்றின் மொத்த சொத்துக்கள் / பொறுப்புக்கள் ரூ. 138,280 இலட்சத்திலிருந்து (ஐ. அ. டொலர் 6,490 இலட்சம்) ரூ. 204,570 இலட்சங்களுக்கு (ஐ. அ. டொலர் 8,180 இலட்சம்) அதிகரித்தன. வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின்

தொழிற்பாடு முக்கியமாக சுதந்திர வர்த்தக வலயத்தில் செயற்றிட்டங்களுக்கு நிதியிடல், அனுமதியளிக்கப்பட்ட வதிவோருக்கு யூரோ நாணய கடன்வழங்கல், வாடிக்கையாளர்களுக்கான வெளிநாட்டு நாணய உத்தரவாதங்களை வழங்கல் ஆகியவற்றைக் கொண்டிருந்தன.

வர்த்தக வங்கிகளின் மொத்த மூலவளம் 1982இன் ரூ. 74,380 இலட்சம் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 101,880 இலட்சத்தால் உயர்வடைந்தது. முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட போக்கினைப்போலவே ரூ. 63,730 இலட்சத்திற்கு வகைகூறும் மூலவள வளர்ச்சியின் கணிசமான பங்கிற்கு எல்லா வகை வைப்புக்களினதும் அதிகரிப்பே காரணமாகும். தவணை சேமிப்பு வைப்புக்கள் (இரு அரச வங்கிகளினதும் நீண்ட தவணை வைப்புக்களும் உட்பட) கேள்வி வைப்புக்கள் ஆகியன முறையே ரூ. 45,760 இலட்சம், ரூ. 17,970 இலட்சம் அதிகரிப்புக்களைக் கொண்டிருந்தன. 1983இல் வர்த்தக வங்கிகளின் கடன்பாடு ரூ. 16,240 இலட்சத்தால் அதிகரித்துள்ளது. இது ரூ. 11,210 இலட்சத்திற்கு வகைகூறும் வங்கிகளிற்கிடையேயான கடன்பாடுகளையும் (மத்திய வங்கியிலிருந்தான கடன்பாடுகளும் உட்பட) வெளிநாட்டுக் கடன்பாடுகளையும் (ரூ. 5,030 இலட்சம்) உள்ளடக்கியுள்ளது. இவ்வாண்டில் மத்திய வங்கியிலிருந்தான வர்த்தக வங்கிகளின் கடன்பாடுகள் ரூ. 14,620 இலட்சத்தால் உயர்வடைந்து முக்கியமாக பல்வேறு மீள் நிதியிடல் திட்டத்தின்கீழ் சலுகைகளின் அதிகரிப்பை விளைவித்தது.

அட்டவணை 1.52

**வர்த்தக வங்கிகளின் மூலவளங்களிலும் அவற்றின் பயன்பாட்டிலும் ஏற்பட்ட மாற்றங்கள்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| துறைகள் | இறுதி 1981/ இறுதி 1982 | இறுதி 1982/ இறுதி 1983 |
|---|---|---|
| 1. அரசு | — 51.4 | 278.0 |
| 2. மத்திய வங்கி ... | — 315.0 | — 41.6 |
| 3. அரச கூட்டுத்தாபனங்கள் ... | 1,416.7 | 532.3 |
| 4. கூட்டுறவு நிறுவனங்கள் ... | 127.9 | — 527.5 |
| 5. ஏனைய தனியார் துறை ... | — 719.7 | — 1,018.3 |
| 6. வங்கியிடையானவை ... | — 108.9 | 1,243.8 |
| 7. வெளிநாட்டுத்துறை | — 349.6 | — 466.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: கழித்தல் அடையாளம் மூலவளங்களின் தேறிய பயன்பாட்டை குறிக்கிறது.

அட்டவணை 1,52 வர்த்தக வங்கிகளின் மூலவளங்களிலும் அவற்றின் பயன்பாட்டிலும் ஏற்படும் மாற்றங்களை தேறிய அடிப்படையில் தருகின்றது. 1983இல் வர்த்தக வங்கிகளின் மூலவளங்களில் ரூ. 10,180 இலட்சத்தைப் பயன்படுத்திய ஏனைய தனியார்துறையே வர்த்தக வங்கிகளின் மூலவளங்களின் பயன்பாட்டின் முதன்மைப் பாவனையாளரென்பதை வலியுறுத்தியது. கூட்டுறவு நிறுவனங்களின் வங்கி மூலவளப் பாவனையும் ரூ. 5,280 இலட்சமாக உயர்ந்த மட்டத்தில் விளங்கியதோடு நெல் கொள்வனவுக்காக நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்கப்

பட்ட பொருள் பெறுகை முற்பணங்களின் அதிகரிப்பில் அதிகளவில் பிரதிபலிக் கப்பட்டது. முன்னைய இரு ஆண்டுகளிலும் அவதானிக்கப்பட்ட போக்கிற்கு மாறாக அரசதுறை வர்த்தக வங்கிகளின் மூலவள பெருக்கத்திற்கு ரூ 2,780 இலட்சம் கொண்ட தேறிய பங்களிப்பினை வழங்கியது. அதேவேளை மத்திய வங்கி வர்த்தக வங்கிகளிடமிருந்து ரூ. 420 இலட்சம்கொண்ட தேறிய தொகையை அதிகரித்த தேவை மூலம் ஈர்த்துக்கொண்டது. வெளிநாட்டுத்துறையின் கொடுக் கல் வாங்கல்களும் முக்கியமாக ஏற்றுமதி வருவாய்களை உள்ளடக்கிய வெளி நாட்டு நிலுவைகளின் அதிகரிப்பின் விளைவால் வர்த்தக வங்கி மூலவளங்களி லிருந்து ரூ. 4,670 இலட்சமளவில் பயன்படுத்தப்பட்டது.

**வங்கிக்கிளை விரிவாக்கம்**

*1983*இல் வர்த்தக வங்கிகள் 16 புதிய கிளைகளைத் திறந்தன. இது இலங்கை வங்கியின் 11 கிளைகளையும் மக்கள் வங்கியின் 3 கிளைகளையும் வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கிகள், வரையறுக்கப்பட்ட அட்டன் நெசனல் வங்கி ஆகியவற்றின் ஒவ்வொரு கிளைகளையும் உள்ளடக்கும். இவ்வங்கிக் கிளைகளுடன் வர்த்தக வங்கி களின் மொத்த எண்ணிக்கை ஆண்டின் இறுதியில் 1,034 ஆக விளங்கியது. (வேளாண்மை பணிநிலையக் கிளைகள் கொடுப்பனவு அலுவலகங்கள், விரிவாக்க அலுவலகங்கள், கச்சேரிக்கிளைகள், வெளிநாட்டுக் கிளைகள் ஆகியன உட்பட) இதேவேளையில் முன்னைய ஆண்டினைப்போல இலங்கை வங்கி அதன் வேளாண்மை பணி நிலையங்களில் ஏழு நிலையங்களை பாதுகாப்பு, பொருளாதார காரணங்களுக் காக வேறு இடங்களுக்கு மாற்றியமைத்தது. 1983இல் மொத்தமாக மாற்றி யமைக்கப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை 311 ஆக உயர்ந்தது, ஆண்டினிறுதி யில் வர்த்தக வங்கிகளின் முதன்மைக் கிளைகள் 600 ஆக விளங்கிய வேளையில் தொழிற்படும் வேளாண்மைப் பணிநிலையங்களின் கிளைகள் 79 ஆக விளங்கின.


தேசிய சேமிப்பு வங்கி மூன்று கிளைகளைத் திறந்து ஆண்டின் இறுதியில் அதன் மொத்தக் கிளைகளை 50 இற்கு உயர்த்தியது. இதேவேளையில் 1982இல் அனுமதி வழங்கப்பட்ட நியூயோர்க் வங்கியாளர்களின் நம்பிக்கைக் கூட்டுநிலையத் தின் பிரதிநிதித்துவ அலுவலகம் 1983இல் தொழிற்படத் தொடங்கியது. இலங் கையில் வெளிநாட்டு வங்கிகளால் திறக்கப்பட்ட இரண்டாவது பிரதிநிதித்துவ அலுவலகம் இதுவாகும்.

**வட்டி வீதங்கள்**

1981 ஓகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட மூன்றுவது முதன்மை வட்டி வீத மறுசீரமைப்பு 1982இல் தொடர்ந்து இருந்துவந்தவேளையில் 1983இல் சில சிறிய திருத்தங்கள் செய்யப்பட்டன. 1980/81 விலை அதிகரிப்புக்களின் அதிஉயர் மட்டங் களுடன் ஒப்பிடுகையில் 1982இலும் 1983 தொடக்கப்பகுதியிலும் நாணயக் கூட்டுக்களினதும் விலைகளினதும் இயக்கத்தில் ஓரளவு உறுதிப்பாடு அவதானிக் கப்பட்டது. இவை மத்திய வங்கிக்கு அதன் வட்டி வீத கொள்கையை மீளாய்வு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி குறிப்பிட்ட தேவைகளுக்கான அவசியம் வேண்டிய வேளையில் திருத்தி அமைப்பதற்கும் வசதியை அளித்தது. ஏற்று மதி சார்ந்த வளர்ச்சியில் முக்கியத்துவம் காட்டப்பட்டுள்ளதால் ஏற்றுமதித் துறைகளுக்கு சலுகை முறையில் கொடுகடன் வழங்குவது அவசியமானது. கேள்வி முகாமைத்துவ நோக்கங்களிற்கான உயர் வட்டி வீத கொள்கை உயர் கொடுகடன் செலவினால் முன்னுரிமைத்துறையின் தொழிற்படு மூலதனத்தின்மீது ஓரளவு பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. எனவே உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்குடன் முன்னுரிமைத்துறைகள் குறைந்த செலவில் கொடு கடன் பெறக்கூடிய வகையில் சில வட்டிவீத மாற்றங்கள் செய்யப்பட்டன.

## வட்டி வீதங்கள்

காலாண்டு இறுதி எண் தொகைகள்




இலங்கை மத்திய வங்கி

கொள்கை வழிமுறைகளில் ஒரு பகுதியாக மத்திய'வங்கி அதன் குறுகியகால வட்டிவீதங்களில் கீழ் நோக்கிய திருத்தத்தினைச் செய்தது. 1983 மாச்சு 24இல் இருந்து மத்திய வங்கி வங்கி வீதத்தை ஆண்டுக்கு 14 இலிருந்து 13 சதவீதத்திற்கு குறைத்தது. தண்டவீத அமைப்பு ஆண்டுக்கு 21-30 சதவீத வீச்சிலிருந்து 20சதவீத அளவுக்கு 1983 மாச்சு 30ஆம் நாளிலிருந்து குறைக்கப்பட்டது.

இந்நடவடிக்கை மத்திய வங்கியிலிருந்தான வர்த்தக வங்கிகளின் கடன்பாடு களின் செலவினைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுவதோடு இதன்மூலம் முன்னுரிமைத்துறைகளுக்கு குறைந்த செலவில் கொடுகடன் வழங்க அவற்றை இயல வும் செய்கின்றன.

மேலும் முன்னுரிமைத் துறைகளுக்கு முக்கியமாக ஏற்றுமதித் துறைக்கு கொடுகடன் பாய்ச்சலை அதிகரிப்பதற்கும் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. கப்பற்படுத்தலுக்கு முன்னைய ஏற்றுமதிக் கொடுகடன்களின் மீதான வர்த்தகவங்கி களுக்கான மத்திய வங்கியின் மீள் நிதியிடலுக்கான வட்டிவீதம் மாச்சில் ஆண் டொன்றுக்கு 12 சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டதோடு 1983 யூனில் 10 சதவீதமாக மேலும் குறைக்கப்பட்டது. வீதங்களின் கீழ்நோக்கிய திருத் தத்தோடு மீள் கடன் வழங்கலின் இலாப எல்லையும் 4 சதவீதத்திலிருந்து 3 சத வீதத்திற்குக் குறைக்கப்பட்டன. மரபு ரீதியற்றஏற்றுமதிகளுக்கான துணை ஏற்று மதி கொடுகடன் மீள் நிதியிடல் வட்டி வீதமும் 1983 மாச்சிலிருந்து ஆண்டொன் றுக்கு 8.5 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக கீழ்நோக்கித் திருத்தப்பட்டது. நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியத்தின் எல்லா வகைகளின் கீழ் வழங்கப்பட்ட கடன் களின் மீதான பொருந்தக்கூடிய வட்டிவீதங்களும் மாச்சில் 1 சதவீதத்தால் குறைக்கபட்டதோடு வகை iii இனதும் iv இனதும் கீழ் மீள் கடன் வழங்கலுக்காக கொடுகடன் நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்ட இலாப எல்லை 1983 ஏப்பிரலில் 5 சத வீதத்திலிருந்து 4 சதவீதமாக குறைக்கப்பட்டது.

1983 ஏப்பிறல் தொடக்கம் தவணை, சேமிப்பு வைப்புக்களைப் பொறுத்தவரை வர்த்தக வங்கிகளுக்கான முக்கிய போட்டியாளராக விளங்கும் தேசிய சேமிப்பு வங்கி முதிர்ச்சிக் காலத்தில் வட்டி கொடுக்கப்படும் ஒரு ஆண்டு நிலையான வைப் புக்கான வீதத்தை 20 இலிருந்து 18 சதவீதத்திற்கும் (வட்டி மாதாந்தம் கொடுக்கப் படுமாயின் 18.6 சதவீதத்திலிருந்து 16.8 சதவீதத்திற்கு) 6 மாத வைப்புக்களுக்கான வீதத்தை 15 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கும் குறைத்தது. 24 மாதநிலை யான வைப்புக்கான வழக்கத்தை தேசிய சேமிப்பு வங்கி நிறுத்திக்கொண்டது.

பொதுவான வட்டிவீத அமைப்பின் வீழ்ச்சியினைத் தொடர்ந்து சில நீண்ட தவணை கடன் வழங்கல் நிறுவனங்களும் 1983 யூனில் கடன் வழங்கும் வீதங்களின் கீழ் நோக்கிய திருத்தங்களை மேற்கொண்டன. இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத் தாபனம் மீள் நிதியிடல் திட்டங்களின் கீழுள்ள சலுகை நிதியிடலுக்கு சலுகைக் குத் தகுதியான செயற்றிட்டங்களைத் தவிர்ந்த எல்லாக் கைத்தொழில் செயற்றிட் டங்களுக்கான கடன் வழங்கல்கள் மீதான வட்டி வீதங்களை 17 சதவீதத்திலி ருந்து 14 சதவீதத்திற்கு குறைத்துக்கொண்டது. புதிய வீதங்கள் 1983 யூனில் இருந்து நடைமுறைக்கு வந்தன. இதே வேளையில் இலங்கை தேசிய அபிவிருத்தி

வங்கி நேரடிக் கடன் வழங்கல் மீதான வட்டிவீதங்களை ஆண்டுக்கு 17 சதவீதத்தி லிருந்து 14 சதவீதமாக குறைத்ததோடு சிறிய நடுத்தர கைத்தொழில் செயற்றிட் டங்களுக்கான வீதங்களையும் ஆண்டுக்கு 20 இலிருந்து 14 சதவீதமாக 1983 யூனில் குறைத்தது.

1983இன் பின்னரைப்பகுதியில் வட்டிவீதங்களின் மாற்றங்களுக்கு முக்கிய மாக ஆண்டின் முன்னரைப்பகுதியில் அறிமுகப்படுத்திய கொள்கை வழிமுறைகள் காரணமாக இருந்தன. முன்னரைப் பகுதியில் வட்டிவீதத்தின் கீழ்நோக்கிய திருத் தங்களைத் தொடர்ந்து இரு அரச வங்கிகளும் முற்பணங்கள் மீதான வட்டிவீதங் களை 1- 4 சதவீத வீச்சால் 1983 யூலையில் குறைத்துக்கொண்டன. மேலும், இலங்கை வங்கி 12 மாத நிலையான வைப்புக்களுக்கு முதிர்ச்சிக் காலத்தில் வட்டி கொடுக்கப் படும்போது வட்டிவீதத்தினை 18 சத வீதத்திலிருந்து 16 சதவீதமாக குறைத்த வேளையில் மாதாந்த வட்டி கொடுக்கப்படும்போது 16.8 சதவீதத்திலிருந்து 14.5 சதவீதமாகக் குறைத்தது. இத்திருத்தங்களோடு ஆறுமாத நிலையான வைப்புக்க ளுக்கு முதன்முறையாக ஆண்டுக்கு 12.5 சதவீத மாதாந்த வட்டிக் கொடுப்பனவு முறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

முக்கியமாக நிதியங்களின் குறைந்த செலவின் விளைவாக கொடுகடனுக்கான கேள்வியும் அதன் விளைவால் தனியார் துறையின் வெளிநிற்கும் கொடுகடனும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் கணிசமான உயர் மட்டங்களுக்கு அதிகரித்தன. 1983இன் இறுதி இரு மாதங்களிலும் மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகளைத் தொடர்ந்து சில வர்த்தக வங்கிகளினதும் அழைப்புப் பணச் சந்தையினதும் வைப்புக்களிலும் கடன் வழங்கல்களிலும் வீதங் கள் கொடுகடனுக்கான அதிகரித்த கேள்வியினை பிரதிபலித்தவாறு 1983 இறுதி யில் உயர்வடைந்து நடைமுறையில் உள்ள வட்டிவீத அமைப்பில் தாக்கத்தினை ஏற்படுத்தின.

அழைப்புச் சந்தையில் வழங்கப்படும் வட்டிவீதங்கள் 1982 டிசெம்பரில் ஆண் டுக்கு 15.75 — 18.5 சதவீத வீச்சில் இருந்து 1983 நடுப்பகுதியில் ஆண்டுக்கு 11.5— 15.0 சதவீதமாக வீழ்ச்சியடைந்து வர்த்தக வங்கிகளின் குறுகியகால நிதிகளில் குறைந்த கேள்வியை கொண்டிருந்ததைப் பிரதிபலித்தது. 1983இன் பின்அரைப் பகுதியில் உயர்ந்த கொடுகடன் கேள்வி வங்கித் திரவத்தன்மையை குறைத்த தன் மூலம் அழைப்புப் பணச் சந்தை வீதங்கள் ஆண்டுக்கு 20—37 சதவீதமான உயர் வீச்சுக்கு ஆண்டின் இறுதியளவில் உயர்ந்தன.

முதலாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல் வீதம் 1983 மேயில் 13.5 இலிருந்து 12 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. இதேவேளை இரண்டாம்தர திறைசேரி உண்டியல் சந்தையில் கழிவு வீதம் 1982 டிசெம்பரின் ஆண்டுக்கு 12.25 சதவீதத்திலிருந்து 1983 யூனில் ஆண்டுக்கு 12 சதவீதமாக குறைக்கப்பட் டது. மீள் கழிவு வீதம் (மத்திய வங்கிக் கொள்வனவு வீதம்) 1982 டிசெம்பரில் ஆண்டுக்கு 13.25 சத வீதத்திலிருந்து 1983 மாச்சில் ஆண்டுக்கு 13.75 சதவீதத் திற்கு அதிகரிக்கப்பட்டு படிப்படியாக கீழ்நோக்கி நகர்த்தப்பட்டு 1983 இறுதியில் ஆண்டுக்கு 12.50 சதவீதமாக விளங்கியது.

அரச பிணைகள் மீதான வட்டிவீதமும் 1982 யூலையில் ஆண்டுக்கு 16 இலிருந்து 14 சதவீதத்திற்கு கீழ்நோக்கித் திருத்தப்பட்டதோடு முதிர்ச்சிக் காலமும் 3 இலிருந்து 5 ஆண்டுகளாக நீட்டப்பட்டது.

**மத்திய வங்கித் தொழில்**

1983 திசெம்பரில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள் / பொறுப்புக்கள் ரூ. 330,970 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 10 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. சொத்துக்கள் பக்கத்தில், எல்லாவகை உள்நாட்டுச் சொத்துக்களிலும் அதிகூடிய அதிகரிப்புக்கள் பிரதிபலிக்கப்பட்ட வேளையில் சொத்துக்களின் அதிகரிப்புக்கள் சிறிதளவானதாகவே விளங்கின.

உள்நாட்டுச் சொத்துக்களில் ரூ. 29,410 இலட்ச அதிகரிப்புக்கு முக்கியமாக வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட குறுகியகால முற்பணங்கள் (ரூ. 15,280 இலட்சம்) காரணமாகும். 1983 இன் முதல் அரைப் பகுதியில் மத்திய வங்கியால் உதவியளிக்கப்பட்ட அதிகரித்த ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் வசதிகளின் பயன்பாட்டின் அளவினையும் சந்தைப்படுத்தல் மீள் நிதியிடல் வசதிகளின் பயன்பாட்டின் அளவினையும் இது வெளிப்படுத்தியது. மேலும் அரசினதும், அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட பிணைகள், முக்கியமாக திறைசேரி உண்டியல் (ரூ. 7,380 இலட்சம்) அரசிற்கான கடன்களும் முற்பணங்களும் (ரூ. 6,540 இலட்சம்) வர்த்தக வங்கிகளுக்கும் ஏனையகொடுகடன் நிறுவனங்களுக்குமான நடுத்தர நீண்டகால மீள் நிதியிடல் கடன்கள் ஆகியனவும் முன்னைய ஆண்டினைவிட குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. எனினும் ஆண்டின் இறுதி மாதங்களில் அரச வைப்புக்கள் கணிசமானளவு அதிகரித்ததன் விளைவாக அரசிற்கான தேறிய கொடுகடன் சிறிதளவாகவே அதிகரித்தது.

பன்னாட்டு ஒதுக்கின் ரூ. 1,500 இலட்ச அதிகரிப்பு வெளிநாட்டுப் பிணைகளின் அதிகரித்த முதலீட்டினதும் (ரூ. 4,940 இலட்சம்) சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் கையிருப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி (ரூ. 1,280 இலட்சம்) வெளிநாட்டிலுள்ள காசிலும் நிலுவைகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சி (ரூ. 2,160 இலட்சம்) ஆகியவற்றின் கூட்டு விளைவாகும். யப்பானிய யென் கடனின் பயன்பாடும் (ரூ. 3,510 இலட்சம்) மத்தியவங்கியின் தேறிய பன்னாட்டு ஒதுக்கில் அதிகரிப்பினை ஏற்படுத்தியது. வெளிநாட்டிலுள்ள காசு நிலுவையின் வீழ்ச்சிக்கு முக்கியமாக துணைநில் கடன்களுக்கான மீளக் கொடுப்பனவும், பன்னாட்டு நாணய நிதியத்தின் கடன்பாடுகளுக்கும் ஏனைய தீர்ப்பனவுகளுக்குமான பணிக் கட்டணங்களின் கொடுப்பனவும் காரணமாகும். ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் என்றவகையும் இவ்வாண்டில் வீழ்ச்சியை (ரூ. 1,620 இலட்சம்) பதிவு செய்தது.

பொறுப்புக்கள் பக்கத்தில் அதிகரிப்புகளுக்கு முக்கியமாக வைப்புப் பொறுப்புக்களிலும் (ரூ. 17,570 இலட்சம்) சுற்றிலுள்ள நாணயத்தினதும் (ரூ. 13,170 இலட்சம்) அதிகரித்த தொகை காரணமாகும். வைப்புப் பொறுப்புக்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு முக்கியமாக 1983 திசெம்பர் நடுப் பகுதியிலிருந்து நடைமுறைக்கு வந்த அதிகரித்த ஒதுக்குத் தேவை காரணமாகும். வர்த்தக வங்கி

களில் தனியார்துறை வைத்திருந்த மேலதிகப் பற்றுக்களின் பயன்படுத்தப்படாத நிலுவையின் மீது 16 சதவீத புதிய ஒதுக்கு அதிகரிப்பின் தேவையின் அறிமுகம் இதை மேலும் அதிகரிக்கச் செய்தது' வெளிநாட்டுக் கடன்பாடுகளிலும் (ரூ. 220 இலட்சம்) மூலதனக் கணக்கிலும் (ரூ. 10 இலட்சம்) சிறிதளவு அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. ஏனைய பொறுப்புக்களிலும் கணக்குகளிலும் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்கு இவ்வாண்டு இலாபத்தினை மத்திய வங்கியிலிருந்து அரசிற்கு மாற்றியமையே காரணமாகும்.

**1983 தேசிய கொடுகடன் திட்டம்**

*1983* இன் தேசிய கொடுகடன் திட்டத்துடன் இலங்கையில் கொடுகடன் திட்டமிடல் தொடர்ந்து மூன்றுவது ஆண்டினை அடைந்தது. முன்னைய இரு ஆண்டுகளைப் போன்று அரச கூட்டுத்தாபனங்கள் உட்பட தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கடன் வழங்கலுடன் கொடுகடன் திட்டம் தொடர்புபட்டிருந்தது. பொருளாதாரத்தில் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு போதிய கொடுகடன் வழங்கப்பட வேண்டியதையும் இத்திட்டம் வலியுறுத்தியது. இதன்படி 1983 கொடுகடன் திட்டத்தின் இரு முதன்மை நோக்கங்கள் முதலாவதாக தனியார்துறைக்குக் கிடைக்கக்கூடிய வங்கி வசதிகளை சிக்கனப்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தின் முக்கியமானதும் வளர்ச்சிடையும் துறைக்கு தேவையான கொடுகடன் வசதிகளை கிடைக்கச் செய்வதும் இரண்டாவதாக கொடுகடன் போக்கினை இனங்கண்டு முன்னுரிமைத் துறைக்கு கூடிய கொடுகடனை வழங்குவதுமாகும்.

முன்னைய இரு கொடுகடன் திட்டங்களைப்போல் பொருளாதாரத்தின் மதிப்பிடப்பட்ட உண்மை வளர்ச்சி பணவீக்க வீதம் புதிய நாணய மயம் ஆகியனவற்றை கணக்கில் கொண்டு நாணய இலக்குகள் மதிப்பிடப்பட்டன. வெளிநாட்டுத் துறையில் நிகழத்தக்க அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு பொருளாதாரத்தில் அனுமதிக்கத்தக்க கொடுகடன் மட்டத்தினுள் நாணய இலக்குகள் மாற்றப்பட்டன. அரசின் கொடுகடன் தேவைகளை அனுசரித்த பின் எஞ்சிய மூலவளங்கள் தனியார்துறைக்கு ஒதுக்கப்பட்டன.

இதன்படி 1983 இறுதியில் தனியார் துறைக்கான வெளிநிற்கும் கொடுடன் ரூ. 314,080 இலட்சம் என மதிப்பிடப்பட்டது. இது 1982 இல் காணப்பட்ட மட்டத்தின் மேல் 24 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. துறைரீதியான கொடுகடன் ஒதுக்கில் வேளாண்மை, கைத் தொழில், ஏற்றுமதித் துறைகள் முன்னுரிமைத் துறைகளாக தொடர்ந்தும் விளங்கின. வேளாண்மைத் துறைக்கான கொடுகடன், ஒதுக்கு ரூ. 39,020 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 26 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. கைத்தொழில் துறைக்கு ரூ. 80,410 இலட்சம் ஒதுக்கப்பட்டு திட்டமிடப்பட்ட ஆண்டில் 22 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. 1983 கொடுகடன் திட்டத்தில் ஏற்றுமதித் துறையே அதிமுக்கிய துறையாக கருதப்பட்டு இத்துறைக்கான வெளிநிற்கும் கொடுகடன் ரூ. 44,140 இலட்சம் என மதிப்பிடப்பட்டதோடு இது 30 சதவீதம் அதிகமாகும். ஏற்றுமதி, கைத்தொழில்

துறைக்கான துறை ரீதியான கொடுகடன் ஒதுக்கு 1982 இல் 25 சதவீத, 13 சத வீதமாக விளங்கி 1983 கொடுகடன் திட்டத்தில் முறையே 26 சத வீதத்திற்கும் 14 சதவீதத்திற்கும் உயர்த்தப்பட்டது. வேளாண்மைத் துறையின் பங்கு 12 சத வீதத்திலேயே தொடர்ந்தும் விளங்கியது. இறக்குமதி நோக்கங்களுக்கான வெளி நிற்கும் கொடுகடன் ரூ. 41,570 இலட்சமாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டினை விட 9 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

துறைரீதியான கொடுகடனுடன் தொடர்புள்ள கால மாற்றங்களுக்கு ஒதுக்கிய பின்பு காலாண்டுக்கான கொடுகடன் ஒதுக்குகள் செய்யப்பட்டன. துறை ரீதியான உண்மை செயலாற்றம் திட்டத்தின் இலக்குகளுடன் இசைவாக விளங்கியது. உண்மையான மொத்தக் கொடுகடன் மட்டம் திட்டமிடப்பட்ட இலக்குகளிலிருந்து சிறிதளவால் (1.5 சதவீதம்) வேறுபட்டுக் காணப்பட்டது.

**நாணயக் கொள்கை**

1982 இல் அடைந்த நாணய விலை உறுதிப்பாட்டின் அளவு 1983 இன் முற்பகுதியில் அறிமுகமான கட்டுப்பாடான நாணயக் கொள்கையின் காரணமாக மிதமாக்கப்பட வேண்டியிருந்தது. 1983 இன் முதல் அரைப் பகுதியில் அறிமுகப்படுத்திய புதிய கொள்கை வழிமுறைகள் முக்கியமாக முன்னுரிமைத் துறைகளின் நடவடிக்கைகளின் உயர் வட்டி வீதங்களின் பாதகமான தாக்கத்தினைத் தணிப்பதனையும் பொருளாதாரத்தில் வளர்ச்சியை ஏற்படுத்துவதையுமே நோக்கமாகக் கொண்டிருந்தன. இதன்படி, வட்டிவீத அமைப்பில் ஓரளவு நெகிழ்ச்சியை அறிமுகப்படுத்துவதன் மூலம் மாற்றமுறும் பொருளாதார நிலைமைகளுக்கேற்ப அதை திருத்தக் கூடியதொன்றாக மாற்றும் நோக்குடன் மத்திய வங்கி குறுகியகால வட்டி வீதங்களில் கீழ்நோக்கிய திருத்தமொன்றை மேற்கொண்டது.

முதல்படியாக 1983 மாச்சு 24 ஆம் நாளிலிருந்து மத்தியவங்கி வங்கி வீதத்தினை ஆண்டுக்கு 14 சதவீதத்திலிருந்து 13 சதவீதமாகக் குறைத்தது. இத்திருத்தத்துடன் ஆண்டுக்கு 21-30 சதவீதத்திலிருந்த தண்டவீதம் 1983 மாச்சு 30 ஆம் நாளிலிருந்து ஆண்டுக்கு ஓரே வீதமாக 20 சதவீதத்திற்கு மாற்றப்பட்டது. வர்த்தக வங்கிகள் அவற்றின் கடன் வழங்கல் வீதங்களைக் குறைப்பதற்காகவே கீழ் நோக்கிய திருத்தங்கள் வடிவமைக்கப்பட்டன.

இம்மாற்றங்களுக்கு மேலாக, முன்னுரிமைத்துறைக்கு முக்கியமாக ஏற்றுமதித்துறைக்கு கொடுகடன் பாய்ச்சலை அதிகரிப்பதற்காக பல்வேறு சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன்படி மாச்சு 24ம் நாளிலிருந்து கப்பற்படுத்தலுக்கு முன்பான ஏற்றுமதிக் கொடுகடன்களுக்காக வர்த்தக வங்கிகளுக்கான மத்திய வங்கியின் மீள்நிதியிடல் மீதான வட்டிவீதம் ஆண்டுக்கு 12 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாக குறைக்கப்பட்டன. நடுத்தர நீண்டகால மீள்நிதியிடல் வசதிகளைப் பொறுத்தமட்டில் நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியத்தின் எல்லா வகைகளுக்குமான வட்டிவீதங்கள் 1 சதவீதப் புள்ளியால் குறைக்கப்பட்டது. இச்சலுகைகளுக்கு மேலாக 1983 மாச்சு 16ம் நாள் மத்தியவங்கி துணை மீள் நிதியிடல் வசதி ஒன்றினை மரபுவழியல்லா ஏற்றுமதித்துறையின் (பெற்றோலிய

உற்பத்திகள், ஆடைகள், இரத்தினக்கற்கள், நீர்க்கல உற்பத்திகள் நீங்கலாக) தேவைகளை வழங்குவதன்பொருட்டு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தினைப் புகுத்தியதன்மூலம் ஏற்றுமதியாளர்களால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிச் சான்றிதழ்களை மத்திய வங்கி கழிவுடன் ஏற்று வர்த்தக வங்கிகளுக்கு ஆண்டுக்கு 8.5 சதவீதத்திற்கு வழங்கியவேளையில் வர்த்தக வங்கிகள் ஆண்டுக்கு 12 சதவீதத்திற்கு மேற்படாத வீதத்தில் மீள் கழிவுசெய்ய அனுமதிக்கப்பட்டன. 1983 மாச்சு 24இலிருந்து கழிவுவீதம் ஆண்டுக்கு 7 சதவீதமாக குறைக்கப்பட்டவேளையில் வர்த்தக வங்கிகள் வாக்குறுதிச் சான்றிதழ்களை ஆண்டுக்கு 11 சதவீதத்தில் மீளக் கழிவு செய்ய அனுமதிக்கப்பட்டன. 1983 யூன் 9 இல் பின்னைய வீதம் மேலும் ஆண்டுக்கு 9.75 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. எனினும் கப்பற்படுத்தலுக்கு முன் முற்பணத்திற்கான பிணையாக வங்கிகளில் வைக்கப்படும் வாக்குறுதிச் சான்றிதழ்களுக்கு பொருத்தமான வட்டி வீதம் ஆண்டுக்கு 10.80 சதவீதமாக குறிக்கப்பட்டது. கடல் உற்பத்தி, இறப்பர், தெங்கு உற்பத்திகளின் குறிப்பிட்ட வகைகளை உள்ளடக்கும் நோக்குடன் இத்திட்டம் 1983 யூலையில் விரிவாக்கப்பட்டு ஒத்தோபரில் வைரத்தின் மீள ஏற்றுமதியை உள்ளடக்கும் விதத்தில் மேலும் விரிவாக்கப்பட்டது. ஏற்றுமதித்துறையின் முன்னேற்றத்துக்காக மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட இன்னுமொரு முக்கிய நடவடிக்கை குறிப்பாக ஏற்றுமதி நிதியிடலிலும் பொதுவாக ஏற்றுமதி அபிவிருத்தியிலும் சிக்கல்களைக்கொண்ட ஏற்றுமதியாளர் குழுக்களை சந்திப்பதன் நோக்கமாக கொண்டு மத்தியவங்கியில் ஏற்றுமதிக் கொடுகடன் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டதாகும். ஏற்றுமதிக் கொடுகடன்பிரிவு ஏற்றுமதியாளர்களினால் எடுத்துக்காட்டப்படும் சிக்கல்களை ஆய்வு செய்துஅவற்றிற்குப் பொருத்தமான தீர்வுகளை அடைய முயற்சிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

1983 ஏப்பிரல் 20ஆம் நாளிலிருந்து நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியத்தின் வகை II இன் கீழ் ஏற்றுமதி ஊக்குவிப்பிற்கும் அபிவிருத்திக்கும் வழங்கப்பட்ட மீள்நிதியிடலின் அளவு வெளிநாட்டு முகவர் நிலையங்களினால் வழங்கப்பட்ட நடுத்தர நீண்டகால நிதியங்களின் செலவுடன் இசைவானதாக விளங்குவதற்காக 100 சதவீதத்திலிருந்து 70 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. இதேவேளை நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியத்தின் வகை III, IV இன்கீழ் கொடுகடன் நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மீள்கடன் வழங்கும் இலாப எல்லை ஆண்டுக்கு 5 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக குறைக்கப்பட்டது.

1983 மேயில் ரூபாப்பிணை வழங்குவதற்கான நியதிகளும் நிபந்தனைகளும் திருத்தப்பட்டதோடு புதிய வழங்கல்களுக்கான முதிர்ச்சிக் காலமும் 3 இலிருந்து 5 ஆண்டுக்கு அதிகரிக்கப்பட்டவேளையில் வட்டிவீதம் ஆண்டுக்கு 16 சதவீதத்திலிருந்து 14 சத வீதமாக குறைக்கப்பட்டது.

ஏற்றுமதித்துறைக்கு மேலும் நிவாரணம் வழங்குவதற்காக மத்திய வங்கி 1983 யூன் 16ம் நாளன்று வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த மீள்நிதியிடலின் மீதான எல்லையை ரூ. 5,900 இலட்சத்திலிருந்து ரூ. 12,000 இலட்சமாக உயர்த்துவதற்கு தீர்மானித்தது. இத்திருத்தத்துடன் கப்பலேற்றப்படுவதற்கு

முன்புள்ள நிலையில் கொடுகடன் செலவினை குறைக்கும் நோக்குடன் கப்பலேற்றப்படுவதற்குமுன் ஏற்றுமதிக் கொடுகடனின் மீள்நிதியிடல் வீதத்தினை 11சத வீதத்திலிருந்து 10 சத வீதத்திற்கு குறைத்த வேளையில் வர்த்தக வங்கிகளுக்கு அனுமதி வழங்கப்பட்ட மீள் கடன் வழங்கல் இலாப எல்லை ஆண்டுக்கு 4 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக குறைக்கப்பட்டது. ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடலுக்கான பொதுவான எல்லை செத்தெம்பர் 22ஆம் நாளிலிருந்து 10 சதவீதத்தால் மேலும் குறைக்கப்பட்டது.

1983இன் பின் அரைப்பகுதியில் காணப்பட்ட நாணய, கொடுகடன் நிபந்தனைகளுக்கு 1983இன் முதல் அரைப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகள் முக்கிய காரணிகளாக விளங்கிய வேளையில் யூலை கலவரங்களும் ஓரளவுக்குக் காரணமாக இருந்தன. ஒகத்து இறுதியில் தனியார்துறைக் கொடுகடனின் வளர்ச்சி வீதம் ஆண்டில் பதியப்பட்ட மட்டங்களில் அதியுயர்ந்ததாகும். கொடுகடனில் ஏற்பட்ட அதிகளவு விரிவாக்கம் பொருளாதாரத்தில் பணவீக்கத் தாக்கங்களை அதிகரித்து சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியது. இச்சூழ்நிலைக்கு மாறாக கொடுகடன் மட்டங்களின் வேகமான அதிகரிப்பினை கட்டுப்படுத்தும் நோக்குடன் தனியார்துறைக்கான வர்த்தக வங்கி முற்பணங்களின்மீது மத்திய வங்கி 1983 நவெம்பர் 1ஆம் நாளிலிருந்து கொடுகடன் எல்லை ஒன்றை தற்காலிகமாக விதித்தது. அதன்படி 1983 நவெம்பர் 1ஆம் நாளிற்குப் பின்பு வர்த்தக வங்கிகள் தனியார்துறைக்கு வழங்கப்பட்ட வெளிநிற்கும் அவற்றின் முற்பணங்களின் மொத்தம் 1983 ஒத்தோபரில் வழங்கப்பட்டு வெளிநிற்கும் அவ்வாறான முற்பணங்களின் மொத்தத்தினை விஞ்சவில்லை என்பதனை வர்த்தக வங்கிகள் உறுதிப்படுத்துமாறு கேட்கப்பட்டன. எனினும் எல்லைக்குள் கொடுகடன் வழங்கும்போது குறிப்பிட்ட முன்னுரிமைத் துறைகளுக்கு முக்கியத்துவம் வழங்குமாறு வர்த்தக வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

நவெம்பர் 30ம் நாளில் கொடுகடன் எல்லை மீளப்பெறப்பட்டு கட்டுப்பாடான கொடுகடன் கொள்கை தொடர்ந்தும் பேணப்படுவதற்காக பல மரபுவழி கொள்கை முறைகள் புகுத்தப்பட்டன. அதன்படி, சட்டரீதியான ஒதுக்குத்தேவை கேள்வி வைப்புக்களின் மீது 14 சதவீதத்திலிருந்து 16 சதவீதமாகவும் தவணை சேமிப்பு வைப்புக்கள்மீது 6 சத வீதத்திலிருந்து 8 சத வீதமாகவும் உயர்த்தப்பட்டது. மேலும் மத்திய வங்கி 1983 திசெம்பர் 16 ஆம் நாளிலிருந்து முதன் முதலாக வர்த்தக வங்கிகள் வசமிருக்கும் தனியார்துறைக்கு அனுமதிக்கப்பட்ட மேலதிகப் பற்றுக்களின் பயன்படுத்தப்படாத நிலுவைமீது 16 சதவீத ஒதுக்கு விகிதம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. மேலும் மத்திய வங்கி 1983 நவெம்பர் 14 ஆம் நாளிலிருந்து தண்டவீதத்தின் கீழ் கிடைக்கத்தக்க அளவை வங்கிகளால் சமர்ப்பிக்கப்பட்ட பிணைகளின் 90 சதவீதத்திலிருந்து 50 சதவீதத்திற்கும் மேலும் நவெம்பர் 22ஆம் நாளில் 25 சதவீதத்திற்கும் குறைத்தது. 1983 நவெம்பர் 23ஆம் நாளில் இருந்து முற்பண தண்டவீதத்தில் வழங்கப்பட்ட முற்பணங்கள் நிறுத்தப்பட்டு தற்காலிக திரவத்தன்மை தேவைகளுக்காக வங்கி வீதத்தில் வர்த்தக வங்கிகளுக்கு அனுமதிக்கப்பட்ட பங்குத்தொகையினை விஞ்சாதவாறு வர்த்தக வங்கிகள் வேண்டப்பட்டன.

1983இன் நாணய விரிவாக்கத்திற்கு தனியார்துறைக்கான கொடுகடனின் மிதமிஞ்சிய அதிகரிப்பே முக்கிய காரணியாகும். ஆண்டின் இறுதி இரு மாதங்களிலும் வெளிநாட்டுச் சொத்துக்களின் கடுமையான் அதிகரிப்பு இதை மேலும் விரிவாக்கியது. அதன்படி, கொடுகடன் நாணய வளர்ச்சி தேசிய கொடுகடன் திட்டத்தில் இவ்வாண்டுக்காக திட்டமிடப்பட்ட மட்டங்களிலிருந்து விலகிச் செல்வதைக் காட்டியது. எனினும் ஆண்டின் பின்னரைப்பகுதியில் நடைமுறைக்குவந்த நாணயக் கொள்கை வழிமுறைகள் கொடுகடனின் கடும் அதிகரிப்பை குறைத்ததோடு நாணய் விரிவாக்கத்தினை கூடியளவு கட்டுப்படுத்தத்தக்க மட்டமான 22 சதவீதத்தில் பேணுவதற்கு உதவியது.